முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சுகப்பிரம்மர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

02.04.2019, செவ்வாய்க்கிழமை

1. **ஆசானாக கலியுகம் தன்னில்**
   **அன்பர்களை நோக்கி காத்திட**
   **நேசக்கரம் நீட்டி தருமமிட்டு**
   **நீதி வழி காட்டும் அரங்கமகா ஞானியே**
2. ஞானியே உன் தருமம் தேற்றுமென
   ஞாலமதில் உன் பெருமை கூறி
   இனிமைபட நித்ய பிரசன்ன ஆசி
   இயம்பிடுவேன் **விளம்பி சேல் திங்கள்**
3. **திங்களிலே மூவாறோர் திகதி குசன் வாரம்**
   **(விளம்பி வருடம் பங்குனி மாதம் 19ம் நாள் 02.04.2019, செவ்வாய்க்கிழமை)**
   **தேசிகனுக்கு சுகப்பிரம்மர் யானும்**
   இங்கனமே உலக நலமுற உரைப்பேன்
   இடைவிடா அரங்கஞானி காட்டும்
4. காட்டும் சன்மார்க்க சுத்தநெறி
   காப்பாயெண்ணி தொடரும் மக்கள்
   வாட்டமான சகல துன்பம் விலகி
   வளமோடு வாழும் காலமே நிறைவும்
5. நிறைவுடன் நிம்மதியான வாழ்வும்
   நேசமுள்ள உறவுகள் பலமும்
   குறைவிலா பொருள் வளமுடன்
   குவலயம் சிறக்க தருமபலமும் பெருக்கி
6. பெருக்கி பேராசான் காண விரும்பும்
   பெருந்தர்மவானாக மேலவர்களின்
   கருத்தான அருளாசிக்கு தகுதி பெற்று
   கடைத்தேறுபவர்களாகவும் விளங்குவர்
7. விளங்கிட உலகை மாற்றியே
   வினைகளில்லா ஞானவான்களை
   கலங்கமற உருவாக்குவேனென
   கலியுகத்தில் சபதம் செய்து வந்துள்ள
8. வந்துள்ள ஞான குருவரங்கன்
   வழி வருபவர்களே அன்பர்களே
   சிந்தையில் வைத்து அரங்கர் நாமம்
   செபதபமாக செய்து வந்தாலே
9. வந்தாலே உங்களுக்கும் வாய்ப்பு
   வரமாக அரங்கர் வழி கிட்டும்
   சிந்தை வைத்து அன்னதானமதின்
   சேவை செய்து வந்தாலே

10. வந்தாலே போதும் உங்களின்
வலுவான தீவினைகளும் விலகி
முந்தை செயல்வழி இடரும் விலகி
முழுமை பாதுகாப்பு கூட்டி

11. கூட்டியே முழுமை ஞானமும்
குருவரங்கன் சிறப்பு தயவும் கூடி
கட்டமில்லா ஞான வாழ்வு எட்டும்
கடைகாலமும் கந்தன் பலம் கிட்டும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுகப்பிரம்மர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

இக்கலியுக மக்களின் துன்பங்களை களைந்து கலியுகத்தினின்று அவர்களை மீட்டு வழிநடத்தும் வல்லமைமிக்க ஞானகுருவாக சற்குருவாக அவதார ஞானியாக ஆகி, அன்பர்களை தாயன்போடு நேசக்கரம் நீட்டி அழைத்து தருமங்களை தாராளமாய் அளவிலாது செய்து நீதியின் வழியினை காட்டி வழிநடத்துகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே தாம் செய்யும் தருமம் இவ்வுலகைக் கடைத்தேற்றிடும் எனக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 19ம் நாள் 02.04.2019, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே சுகப்பிரம்மர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுகப்பிரம்மர்.

உத்தம மகா ஞானி கலியுக காவல் தெய்வம் முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உபதேசிக்கின்ற சன்மார்க்க சுத்தநெறியே நம்மை காக்கவல்ல உண்மை ஞானநெறி என்றே முழு நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டு வாழ்வில் கடைப்பிடித்து வருகின்ற மக்களுக்கு, அவர்களுக்கு உண்டான துன்பங்கள் எல்லாம் அவர்களை விட்டு விலகி ஓடும். வாழ்வில் வளம்பல உண்டாகி வளமான வாழ்வை நிறைவான வாழ்வினை வாழ்ந்து நிம்மதியும் அமைதியும் கொண்டு நேசம்மிக்க உறவுகளை பக்கபலமாகக் கொண்டு குறைவற்ற செல்வ நிலைகள் பெருகி தானதருமங்களை செய்து தருமபலத்தினை தர்மத்தின் தலைவன் அரங்கமகான் விரும்புகின்ற பெருந்தர்மவான்களாக ஆகி முற்றுப்பற்ற ஞானிகளின் மேன்மையான அருளாசியை பெறுகின்ற தகுதி மிக்கவர்களாக ஆகி, அவரவரும் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வார்கள்.

**“மாமாயை சூழ்ந்து துன்பம் மிக்கதாய் உள்ள கலியுகத்தின் துன்பங்களை நீக்கி கலியுகத்தினை மாற்றி ஞானயுகமாக ஆக்கி வினைகள் இல்லாத குற்றமற்ற ஞானவான்களை உருவாக்குவேன்”** என்றே சபதம் செய்து கலியுகத்தினில் முருகப்பெருமானின் அவதாரமாக யுகமாற்ற மகா ஞானியாக அவதாரம் செய்துள்ளார் அரங்கமகான்.

அத்தகைய அவதார யுகமாற்ற மகா ஞானி, குரு அரங்கமகா தேசிகனாரின் கொள்கைகளை ஏற்று அரங்கனை பின் தொடருகின்ற அன்பர்களே அரங்கமகா தேசிகனாரின் திருநாமங்களை சிந்தையில் வைத்து தினம்தினம் மறவாமல் நாமஜெபங்களை ஜெபதபமாக செய்து வந்தால் மட்டுமே உங்களுக்கான வாய்ப்புகள் ஆறுமுக அரங்கன் மூலம் வரங்களாக கிடைத்திடும்.

அரங்கமகா தேசிகனாரை சிந்தையிலே வைத்து தானத்தில் சிறந்த அன்னதானத்தினை ஏற்று அரங்கன் ஆற்றும் அன்னதான பணிகளிலே, தர்மங்களை செய்தும், தொண்டுகள் செய்தும் வந்தாலே போதுமப்பா. உங்களைப் பற்றிய தீவினைகள் எல்லாம் உங்களை விட்டு விலகி ஓடிவிடும். முந்தைய ஜென்மங்களிலே செய்திட்ட கர்மவினை துன்பங்களும் விலகி அரங்கனின் முழுமையான அருள் பாதுகாப்பும் பெறுவீர்கள்.

அரங்கனின் அருள் பாதுகாப்பை பெற்று முழுமை ஞானமும், அரங்கனின் தயவும் பெருகி துன்பமற்ற ஞானவாழ்வும் பெற்று இறுதி வரையிலும் முருகப்பெருமானின் அருளை நீங்காமல் பெற்று சிறப்புடன் வாழ்வீர்கள் எனக் கூறுகிறார் மகான் சுகப்பிரம்மர்.

–சுபம்–